1990 சனவரி 23] [டாக்டர் மு. கருணாநிதி]

பதைச் சொல்ல இயலாது. உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டு முன் உதாரணங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இந்த அவையிலே தலைவராக மாத்திரமல்லாமல் முன்பு இருந்த அரசுக்கு நல்ல ஆலோசகராகவும் இருந்திருக்கிறார்கள். அப்போது இந்த ஆலோசனைகள் எல்லாம் சொல்லப்பட்டனவா? அவை ஏற்றுக் கொள்ளப்பட்டனவா என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. ஒருவேளை அவர் சொல்லியிருக்கக் கூடும். இருந்தாலும் மாநில அரசே இன்னின்ன பெயர்கள் என்று நிர்ணயித்து அறிவிக்கும் முடிவை மேற்கொள்ள இயலாது. ஏனென்றால் இது டெல்லி வரை சென்று, அதற்குப் பிறகுதான், அதனை ஏற்றுக்கொண்ட பிறகுதான் அந்தப் பெயர்களை அறிவிப்பது என்கிற நிலை இதுவரையிலே நடைமுறையில் இருந்து வருகிறது. நம்முடைய உயர் நீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகளுடைய Sanctioned strength 25. இப்போது இருப்பவர்கள் 19 பேர். நாளையதினம் ஒருவர் ஓய்வு பெறுகிறார். அந்த இடத்தையும் சேர்த்தால் செய்யப்பட வேண்டிய நியமனங்கள் 7 என்று ஆகிறது. நாம் புதிதாகக் கேட்டு அதற்காக ஆணை எதிர் பார்க்கப்படுவது 7 பேருக்கு, நாம் முதலில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே 4 பேருக்கும் பிறகு 8 பேருக்கும் புரப்போசல் அனுப்பி, இதுவரையிலே அதற்கான அங்கீகாரம் நமக்கு வந்து சேரவில்லை. மறுபடியும் ஆட்சி மாறிய பிறகு மீண்டும் அதற்குள்ள முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மறுபடியும் அந்தப்பெயர்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு நாம் அந்த 8 பேர்களுக்குப் பதிலாக 6 பேர்களுடைய பெயர்களை அனுப்பி இருக்கின்றோம். முதலில் அனுப்பப்பட்டு நீண்ட நெடுங்காலமாக இன்னும் அங்கீகாரம் பெறாமல் இருப்பது 4; மறு பரிசீலனைக்குப் பிறகு அனுப்பப்பட்டு இருப்பது 6; ஆக மொத்தம் 10 பெயர்கள் நம்முடைய சார்பில் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் அதற்கான அங்கீகாரம் வந்தபாடில்லை.

10-30 மணி

(இ) பால் கொள்முதலில் வெட்டு செய்துள்ளதால் பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குட்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் சங்க அங்கத்தினர்களிடமிருந்து 10 முதல் 15 சதவீதம் பாலைக் குறைத்து வாங்க வேண்டுமென்று ஒன்றியம் கட்டளையிட்டு, வாய்மொழியாகச் சங்கச் செயலாளருக்கு உத்திரவு வழங்கி, பால் வாங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் பாலை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உற்பத்தி செய்யும் விவசாயிகள் அந்தப் பாலை எங்கே கொண்டு செல்வது என்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் நிலைமையை நாம் பார்க்கிறோம்.

அதேநேரத்தில் பெரியார் மாவட்டத்தில் குறிப்பாக 3 லட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் இருந்தாலும் கூட ஒரு லட்சத்து 45 ஆயிரம் லிட்டர் பால் தான் அங்கே வருகிறது என்ற நிலையிலும் கூட, வேறு மாவட்டத்திலிருந்து 50 ஆயிரம் லிட்டர் பாலை வாங்கி அந்த மாவட்டத்தில் இருக்கிற 1 லட்சத்து 45 ஆயிரம் லிட்டர் பாலைக் கூட வாங்காது இருக்கிற ஒரு அவல நிலை அந்த மாவட்டத்தில் இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதே நேரத்தில் பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் வங்கிகளிலே வாங்கிய கடனைக் கூட திருப்பிச் செலுத்த முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது என்பதையும் 10 நாட்களுக்கு ஒரு முறை பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பட்டுவாடாப் பணம் கொடுக்கப்படாமல் 3 மாத காலமாக அந்தச் சங்கங்களுக்கு வழங்காத காரணத்தால் சங்கத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்குப் பணம் கொடுக்க முடியாத இக்கட்டான சூழ்நிலை நிலவிக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த அரசுக்கு உணர்வூட்டுகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற பாலுக்குத்தான் ஒரு நிர்ணய விலை இருக்கிறதே தவிர அவர்கள் உற்பத்தி செய்கின்ற வேறு எந்தப் பொருள்களுக்கும் நிர்ணய விலை இல்லை என்பதையும் இந்த அரசுக்கு உணர்வூட்டி, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, பாலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளினுடைய பால் அத்தனையையும் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதோடு பாலுக்குப் பணம் பட்டுவாடா செய்வதை 10 நாட்களுக்கு ஒரு முறை என்று முதலில் தந்தது போல்—3 மாத காலாமக பணம் தராமல் இருப்பதைத் தவிர்த்து உடனடியாக அவர்களுக்குப்பணம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு விரைவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் சங்கங்களில் உற்பத்தி ஆகும் பால் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் குறைவாகக் கொள்முதல் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு உண்மையல்ல. ஒவ்வொரு ஆண்டும் கிராம அளவில் பால் வளப் பணிகள் மூலமாக பால் உற்பத்தி மிகக் கணிசமான அளவு பெருகி வருகிறது. 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பால் உற்பத்தியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க பால் கொள்முதல் விலையை உயர்த்திய காரணத்தாலும், வள

1990 சனவரி 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மிக்க மாட்டுத் தீவனம் அளித்ததாலும் சீரிய முறையில் கால் நடைப் பராமரிப்பு மற்றும் இனவிருத்தி செய்யப்பட்டதாலும் பால் உற்பத்தி வேகமாக அதிகரித்து வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 10,00,000 லிட்டர் பால் ஒரு நாளைக்குக் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. 1987ஆம் ஆண்டு 9,15,292 லிட்டர் பால் கொள்முதல் செய்யப் பட்டு இருக்கிறது. 1988ஆம் ஆண்டு 11,19,580 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. நான் முதலில் சொன்ன காரணத்தால் பால் அதிகமாக உற்பத்தி ஆகி 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 14,13,095 லிட்டர் பால் கொள்முதல் செய்து இருக்கிறார்கள். இருந்தாலும் இன்னும் இதைவிட 2,00,000 லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி ஆவதாகச் சொல் கிறார்கள். அதைக் கொள்முதல் செய்வதற்கு நமக்கு போதுமான வசதி இருந்தாலும் கூட அதைப் பதப் படுத்துவதற்கு வேண்டிய வாய்ப்புகள் இல்லை. நம்மிடத் தில் இருக்கக்கூடிய எல்லா ஒன்றியங்களிலேயும் ஒரு நாளைக்கு 12,00,000 லிட்டர் பாலைத்தான் பதப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றாலும்கூட இந்த முறையீடு வந்த காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி எந்தவிதமான புகாரும் வரக்கூடாது என்ற அடிப் படையிலே 2,00,000 லிட்டர் பால் ஒரு நாளைக்கு அதிகமாக வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஏதோ நம்முடைய மாநிலத்தில் மட்டும் அல்ல, நமக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளாவில், கர்நாடகாவில், மகாராஷ் டிரா, குஜராத் போன்ற மாநிலங்களிலும்கூட இதே பிரச்சினை இந்த ஆண்டு உருவாகி இருக்கிறது.

10-35 மணி

ஆனால், மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களிலேயும் கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களிலேயும் இதைத்தவிர்ப் பதற்காக ஒவ்வொரு மாதமும் 10 நாள் ''பால் கொள்முதல் விடு முறை'' அளிக்கும்படி அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இதே கருத்தை நம்முடைய ஒன்றியமும் அரசுக்கு பரிந்துரை செய்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி, மாதத்திற்கு 10 நாட்கள் ''பால் கொள்முதல் விடு முறை'' விட்டால் பால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள். எனவே, அப்படிப்பட்ட விடுமுறை தமிழகத்திற்கு விட வேண்டாம் என்று அவர்கள் சொன்னதன் பேரிலே விடுமுறை அளிக்காது இயன்றவரை உற்பத்தியாகும் பாலை நாம் கொள் முதல் செய்து கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உற்பத்தியாகும் பாலுக்குப் பணம் கொடுப்பது பற்றியும் ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே நம்முடைய பால் உற்பத்தி ஒன்றியம் இப்படிப்பட்ட பிரச்சினை தமிழகமெங்கும் இருக்கிறது என்பதை அறிந்து, உடனடியாக, ரூ. 15 கோடி கடன் வாங்கி, மதுரை ஒன்றியத்திற்கு ரூ. 130 லட்சம்: திருச்சி ஒன்றியத்திற்கு ரூ. 15 இலட்சம், அண்ணா ஒன்றியத்திற்கு ரூ. 240 இலட்சம் என்று இப்படி மொத்தமாக தர்மபுரி, மதுரை, ஈரோடு சேலம் போன்ற ஒன்றியங்களுக்கு 11.60 கோடி ரூபாயை முன்பணமாகக் கொடுத்து பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பணத்தைப் பட்டுவாடா செய்யுங்கள் என்றும் அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. எனவே இந்த அரசாங்கத்தை பொறுத்தவரையில் உற்பத்தியாகிற அவ்வளவு பாலையும் கொள்முதல் செய்யக்கூடாது என்பதல்ல. இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப பாலைக் கொள்முதல் செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைகூட இன்னும் ஒரு மாதம் அல்லது 2 மாதங்கள்தான் இருக்கும். மார்ச் மாதம் நாமே கேட்டால்கூட பால் உற்பத்தியாளர்கள் நமக்குத் தேவையான பாலைக் கொடுக்க முன்வரமாட்டார்கள். இருந்தாலுங்கூட மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மனதில் கொண்டு, எல்லா இடங்களிலும் பாலைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த புள்ளி விவரங்களிலிருந்து ஆண்டுதோறும் தமிழகத்தில் பால் உற்பத்தி அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பது தெரிகிறது. ஆகவே பால் உற்பத்தி பெருகி வருகிற நேரத்தில் பாலைப் பதனிடக்கூடிய நிலையங்களை ஆங்காங்கே உருவாக்கி ஆங்காங்கே பாலைச் சேகரித்து பால் உற்பத்தியாளர்களிடமிருந்து அவ்வளவு பாலையும் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம் அல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவருடைய வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பாலிலிருந்து வெண்ணை மற்றுமுள்ள பொருள்களைத் தயாரிப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலும் நமக்கு 3000 டன் பால் பவுடர்தான் வைத்துக் கொள்ளலாம் என்றிருந்த நிலமைக்கு மாறாக 5,000 டன் பால் பவுடர் வைத்துக் கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். எனவே எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக்

1990 சனவரி 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கொண்டிருக்கிறது. இன்னும் திருநெல்வேலியில் அதிகமான பாலைப் பதப்படுத்தக்கூடிய பக்குவப்படுத்தக்கூடிய ஒரு தொழிற்சாலையைத் தொடங்க இந்த அரசு முயற்சி செய்கிறது. எனவே எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

(ஈ) ''இந்து'' இதழ் நிருபரை சிலர் தாக்கியுள்ளது, சில இடங்களில் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பெற்றுள்ளது, சிறுபான்மை சமுதாயத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியது ஆகியவை குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அண்மையிலே இந்த மாத முதல் வாரத்திலே, திருவையாற்றிலிருந்து தஞ்சாவூருக்கு வருகின்ற வழியில் இந்து பத்திரிகையின் ரிப்போர்ட்டர் நம்மைப்பற்றிய சமாச்சாரத்தையும் எழுதி அனுப்புபவர்கள், அப்படிப்பட்ட ரிப்போர்ட்டர் ஒருவர் தன் ஸ்கூட்டரில் வரும்போது சில சமூக விரோதிகளோ அல்லது யாரோ, அவர்களைச் சர்க்கார் யார் என்று கவனித்ததோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை, அந்த ரிப்போர்ட்டரைக் கீழே தள்ளி 4, 5 பேராகச் சேர்ந்து இழுத்துப் போட்டு அடி அடி என்று அடித்து அதோடு மட்டுமல்ல—அவர் அணிந்திருந்த பூணூலையும் அறுத்து, இம்சித்து பலவிதமான தொந்தரவுக்கு அவரை ஆளாக்கினார்கள் என்று சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கிறது என்று எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது.

நம் நாட்டிலே **1950**ஆம் வருஷம் ஜனவரி 26ஆம் தேதி எல்லா சுதந்திரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேச்சு உரிமை, எழுத்துரிமை, ஓட்டுரிமை எல்லாம் அன்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அடிக்கிற உரிமை கொடுக்கப்படவில்லை. அரசியல் சட்டத்தில் இம்மாதிரி அடித்து துன்புறுத்துகிற உரிமை கொடுக்கவில்லை. அதனால்தான் அது மாதிரி உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, அந்த மாதிரி ஏதாவது சம்பவம் நடந்தால் அதிலிருந்து பாதுகாப்பதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு. அரசாங்கம் குண்டர்களுக்கும், பணக்காரர்களுக்கும் அல்ல. எங்களைப் போன்றிருக்கின்ற மைனாரிட்டிகள், ஏழைகள் இதுமாதிரி இருக்கின்றவர்க்கங்களுக்குத்தான் சர்க்காரேயொழிய மற்றபடி இதுபோன்ற சமூக விரோதிகளுக்கும், மற்றவர்களுக்கும் அல்ல. எனவே இது குறித்து சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலிலே நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

10-40 மணி

அதுபோல நீடாமங்கலத்திலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. கான்பரென்ஸ் ஒன்று நடந்தது திருச்சிராப்பள்ளியிலே. நாட்டிலே எத்தனையோ வகுப்புகள் இருக்கின்றன. இந்த நாட்டை செக்யூலர் ஸ்டேட் என்று சொல்கிறோமே தவிர, நாட்டிலே இன்னும் இது அடங்கவில்லை. இதற்குச் சர்க்கார் நடவடிக்